இதழ் 02

தமிழ் எங்கள் உயிருக்கு மேல்

# தமிழ்க்கதிர்

மாணவர் சஞ்சிகை ஐப்பசித் திங்கள் 2023

2054 க



தமிழ்க் கல்வி நிலையம், ஹோம்புஷ்

www.tsch.org.au

இந்த சஞ்சிகை ஹோம்புஷ் தமிழ்க் கல்வி நிலையத்தால் வெளியிடப்பட்டது.

எல்லாப் பதிப்புரிமையும் ஹோம்புஷ் தமிழ்க் கல்வி நிலையத்திற்கே உரியது.

முதலாவது பதிப்பு வெளியீடு - 01 Oct 2023

இதழ் ஆசிரியர்கள் குழு

ஆண்டு 11

1. கவிதாரனி மனோகரன்

2. விக்னேஷ் சுஜந்தன்

3. மஹதி கார்த்திகேயன்

5. யாழினியன் ஜசிதரன்

5. மனஸ்வினி கார்த்திகேயன்

ஆண்டு 10

1. சிவலிங்கேசர் சிவகுமார்


2. தனிஷ்கா சிவகுமார்

3. வேதவர்ணா ராஜா

உள்ளடக்கம்


| | | |
|---|---|---|
| 1 | ஆக்கங்கள் - பாலர் முன்பள்ளி | 1 - 3 |
| 2 | ஆக்கங்கள் - பாலர் கீழ்ப்பிரிவு | 4 – 6 |
| 3 | ஆக்கங்கள் – பாலர் மேற்பிரிவு | 7 - 7 |
| 4 | ஆக்கங்கள் – ஆண்டு 01 | 8 - 12 |
| 5 | ஆக்கங்கள் – ஆண்டு 02 | 13 - 15 |
| 6 | ஆக்கங்கள் – ஆண்டு 03 | 16 – 16 |
| 6 | ஆக்கங்கள் – ஆண்டு 04 | 17 – 18 |
| 7 | ஆக்கங்கள் – ஆண்டு 06 | 19 – 20 |
| 8 | எனது பிரதான பாடசாலையில் பல்கலாசார நாள் | 21 – 22 |
| 9 | தமிழின் பெருமை | 23 – 24 |
| 10 | மன அழுத்தம் மாணவர் சமுதாயத்தை எவ்வாறு பாதிக்கிறது | 25 – 26 |
| 11 | “மரங்களும் நண்பர்களே,” சிறுகதை வாசிப்பு அனுபவம் | 27 - 28 |

கா. அநுத்ரா.
பாலர் மென்பள்ளி



நாவ்யா

12/08/2023 பாலர்முன்பள்





மகான்
பாலர் முன்பள்ளி

வண்ணத்திப்
பூச்சி



அத்விகா தி. வி.

ADHVIKA D.V.




ஹஷ்வின் சுபாகரன்



Avan
by UKG Avan

சுவேதா சரவணன்

வகுப்பு 1

செல்லத் தோழி வாத்து

அழகான வாத்து
அம்சமான வாத்து
மஞ்சள் நிற வாத்து
மெல்ல நடக்கும் வாத்து
செல்லமான வாத்து
சமத்து இந்த வாத்து





## மரம்



மரம் நிழல் தரும். மரத்திலிருந்து காய்கறிகளும்
பழங்களும் கிடைக்கும். மரம் சுத்தமான
காற்றைத் தரும். பச்சை இலைகள்
பசேலென இருக்கும். பல வண்ண
நிறங்களில் பூக்களைப் பூக்கும். மேசை,
கதிரை கட்டில் செய்ய உதவும். பறவைகள்
மரங்களில் கூடு கட்டும். இலை
உதிர் காலத்தில் மரத்திலிருந்து
இலைகள் உதிரும். இலை துளிர்
காலத்தில் மரம் தழைக்கும். கோடை
காலத்தில் மரம் குளிர்மையைத் தரும்.
"மரம் நடுவோம் பயன் பெறுவோம்"

ஹஷினி பவன்
ஆண்டு 1K


மாலை
நேரம் ஒரு
குடும்பம்
பென்குயின்
சரவணன்

ஆண்டு - 1 பழங்கள்



1) பழங்கள் உடலுக்கு பலம் தரும்.
2) பழங்கள் உடலுக்கு நலம் தரும்.
3) மா, பலா, வாழை முக்கனிகள் ஆகும்.
4) எனக்குப் பிடித்த பழம் மாம்பழம்.
5) தினம் ஒரு பழமாவது உண்ண வேண்டும்

அயனா ஜெயகணேஷ்

# எனது தமிழ்ப் பாடசாலை

எனது தமிழ் பாடசாலையின் பெயர் ஹோம்புஷ் தமிழ்க்கல்வி நிலையம் ஆகும்.
இது 1987ம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது.
இங்கு சனிக்கிழமை தோறும் வகுப்புக்கள் நடைபெறுகின்றன.
நான் இங்கு இரண்டாம் வகுப்பில் படிக்கின்றேன்.
எனது வகுப்பு ஆசிரியர்கள் திருமதி கனகேஸ்வரி வனதேவா, திருமதி யௌவனா புகழேந்திரன்.
ஒவ்வொரு ஆண்டும் மாணவர்களது திறமைகளை வெளிப்படுத்தும் முகமாக பேச்சுப்போட்டி, தமிழ் அறிவுப் போட்டிகள், கலைவிழா, வாணிவிழாக்கள் நடாத்தப்படுகின்றன.
இன்று இக்கல்வி நிலையம் 36 ஆண்டுகள் கடந்தும் மிகவும் சிறப்பாக நடைபெற்ற வண்ணம் உள்ளது.

ஆகாஷ் திருவழகன்
ஆண்டு 2

கார்த்திக்
தரம் 2 K

# சிங்கமும் விலங்குகளும்

ஒரு காட்டில் ஒரு மரத்தின் கீழ் சிங்கம் அமர்ந்திருந்தது. அந்த வழியால் ஒரு செம்மறி ஆடு வந்தது. சிங்கம் அதைப் பார்த்து "எனது வாய் துர்நாற்றமாக இருக்கிறதா" என்று கேட்டது. அந்த செம்மறி ஆடு, 'ஆம் சிங்க ராஜா உங்கள் வாய் துர்நாற்றமாக இருக்கிறது' என்று கூறியது. இதைக் கேட்ட சிங்கம் மிகவும் கோபமடைந்து "நான் தான் இந்தக் காட்டின் ராஜா என்னை எப்படி இப்படிக் கூறலாம்" என்று கேட்டது. ஆடு பயத்தில் "மன்னிக்க நான் உண்மையைக் கூறினேன்" என்று பெருமையாகக் கூறியது. கோபமடைந்த சிங்கம் அந்த குற்றமற்ற ஆட்டைக் கொன்றது.




பின்னர் அவ்வழியால் குரங்கு ஒன்று வந்தது. குரங்கைப் பார்த்த சிங்கம் "குரங்கே, என் வாய் துர்நாற்றமாக இருக்கிறதா?" என்று கேட்டது. அதற்கு குரங்கு சிங்கத்தைப் பார்த்து "நீங்கள் இந்தக் காட்டின் ராஜா உங்கள் வாய் எப்படி துர்நாற்றம் வீசும்? உங்கள் வாய் நல்ல மணம் வீசுகிறது" என்று புகழ்ந்தது. இதைக் கேட்ட சிங்கம் "நீ பொய் சொல்கிறாய் உடனே இங்கிருந்து போ" என்று கோபமாக அடித்து துரத்தியது.



பின்னர் அவ்வழியால் நரி ஒன்று வந்தது. நரியைப் பார்த்து சிங்கம் "நரி என் வாய் துர்நாற்றமாக இருக்கிறதா" என்று கேட்டது. அதற்கு நரி "மன்னிக்க வேண்டும் ராஜா எனக்கு சளியாக இருக்கிறது. அதனால் எனக்கு எந்தவொரு மணமும் தெரியவில்லை. கொரோனா வைரஸ் தொற்றிவிட்டதோ தெரியவில்லை" என்று தந்திரமாகக் கூறியது. இதனுடன் நரி தொண்டையைச் செருமி இருமத் தொடங்கியது. இதைக் கேட்ட சிங்கம் "ஐயோ உனக்கு கொரோனா தொற்றிவிட்டதா? உடனே உன் வீட்டுக்குப் போய் தனிமையில் இரு. வெளியே வரவே கூடாதே" என்று கூறி குகையை நோக்கி ஓடியது.



நீதி :- சந்தர்ப்பத்திற்கேற்றவாறு நடந்து கொள்ள வேண்டும்.



## அன்புள்ள அம்மப்பாவுக்கு...

அன்புள்ள அம்மப்பாவுக்கு உங்கள்
ஐயா கணேஷ் எழுதுவது,

நீங்கள் எங்களைவிட்டு பிரிந்தாலும்
உங்கள் குரல் எனது காதில்
ஒலித்துக்கொண்டு இருக்கின்றது.
நீங்கள் என்னை "ஐயா இங்கே
வாருங்கோ" என்று கூப்பிட்டு
கொஞ்சுவீங்கள். மீண்டும் ஒருமுறை நீங்கள் இப்படி
கூப்பிட மாட்டீங்களா?

அம்மப்பா, நீங்கள் இப்போது என் கண்களுக்கு
முன்னால் இல்லாவிட்டாலும் என் இதயத்தில்
உங்கள் படம் இருக்கும்.

உங்களை ஒருதரம் கட்டிப்பிடிக்க விரும்புகிறேன்.
அப்போது உங்களை இறுக்கமாக கட்டிப்பிடித்து
ஒருபோதும் விடமாட்டேன்.

இப்படிக்கு,
கணேஷ் விக்னஹரன்
ஆண்டு 2S

## பருவகாலங்கள்

அவுஸ்திரேலியாவில் நான்கு பருவகாலங்கள் உள்ளன. அவையாவன இலையுதிர் காலம், குளிர் காலம், இலை துளிர் காலம், கோடை காலம். ஒவ்வொரு காலமும் மூன்று மாதங்கள்.



### இலையுதிர் காலம்

பங்குனி, சித்திரை, வைகாசி மாதங்களில் இலைகள் பழுத்து கீழே விழும். கிளைகள் வெறுமையாக இருக்கும். வைகாசியில் மெதுவாக குளிரத் தொடங்கும்.

### குளிர் காலம்

ஆனி, ஆடி, ஆவணி மாதங்கள் கடும் குளிராக இருக்கும். சில இடங்களில் பனி கொட்டும். பகல் நேரம் குறைவாகவும் இரவு நேரம் கூடுதலாகவும் இருக்கும்.





### இலைதுளிர்/வசந்த காலம்

குளிர் குறைந்து வெப்பம் கூடும் மாதங்கள் புரட்டாதி, ஐப்பசி, கார்த்திகை. இலைகள் துளிர்க்கும். பூக்கள் பூக்கும். இது பறவைகளுக்கும் தேனீக்களுக்கும் விருப்பமான காலம்.

### கோடை காலம்

வெப்பம் மிகக் கூடிய மாதங்கள் மார்கழி, தை, மாசி. பாடசாலை நீண்ட விடுமுறை விடும். கடற்கரையில் சனக் கூட்டம் அதிகமாக இருக்கும்.



ஹரிணி பவன்
ஆண்டு 3N

## சுற்றுச்சூழல் மாசுபாடு


சுற்றுச்சூழல் மாசுபாடு அல்லது சூழல் (Pollution) என்பது
மனித செயல்கள் மூலம் உருவாகும் மாசுகளால், சூழலின்
ஆதாரங்களாகிய காற்று, நீர், மண் வளங்களும், அங்கு
வாழும் உயிரினங்களும் பாதிப்புக்குள்ளாகி, அதனால்
சூழல் சமநிலை சீர்றுப் போகும் நிலையைக் குறிக்கும்.
சூழலுக்கும் அங்கே வாழுகின்ற உயிரினங்கள் கேடு
விளைவிக்கக் கூடியவையின் சேர்க்கையினால்
சூழற் சமநிலை பாதிக்கப்படும். சூழல் மாசினால்
அச்சூழ்மண்டலத்தில் வாழும் தாவரங்களும்,
விலங்குகளும் பல்வேறு வகையான பாதிப்புகளுக்கு
உள்ளாகின்றன. தற்பொழுது உலகை அச்சுறுத்தும்
பத்து அச்சுறுத்தல்களில் சூழ்நிலைச் சீர்கேடும் ஒன்று
என ஐக்கிய நாடுகள் அவை அறிவித்துள்ளது.
சூழல் மாசானது சில வேதியியல் பதார்த்தங்களாகவோ
அல்லது வெப்பம், ஒளி, ஒலி போன்ற சக்திகளாலானதாக-
-வோ இருக்கலாம். பல்வேறு காரணங்களால் சூழல்
மாசடைகின்றது.

சனா வேல்மணி
ஆண்டு 4

## ஆசிரியர்

எனது தமிழ் ஆசிரியரின் பெயர் சாந்தினி. அவர் எங்களுடன் மிகவும் அன்பாக நடந்து கொள்வார். அவர் எங்களுக்கு தமிழை மிகவும் விளக்கமாகவும், விரிவாகவும் சொல்லித் தருவார்.

அவர் எங்களுக்கு சிறு கதைகள் பழமொழிகள், கவிதைகள், திருக்குறள்கள் என எல்லாவற்றையும் கற்பிப்பார். அத்துடன் அவர் எங்களுக்கு சிறிய கண்டிப்புடன் நல்ல பழக்க வழக்கங்களையும் சொல்லித் தருவார். நாங்களும் அவரிடம் மிகவும் நல்ல மரியாதையும், மதிப்பும் வைத்துள்ளோம். அவர் வேம்புளப் தமிழ் பாடசாலையில் நீண்ட காலமாக பணியாற்றி வருகின்றார்.




அருந்தன் பார்திபன்
ஆண்டு 4

## உப்புமா

அத்வைதா பார்த்தீபன் ஆண்டு 6

தேவையான பொருட்கள்

- வறுத்த ரவை
- கடலைப் பருப்பு
- உளுத்தம் பருப்பு
- கடுகு
- கறிவேப்பிலை
- வெங்காயம்
- மிளகாய்
- உப்பு
- நெய்



செய்முறை

1. ஒரு பாத்திரத்தில் நெய் விட்டு கடுகு, கடலைப் பருப்பு கறி வேப்பிலை இட்டு தாளிக்கவும்.
2. பின்பு அதனுள் வெங்காயம், மிளகாய் இட்டு வதக்கவும்.
3. பின்பு 2 கப் தண்ணீர் விட்டு கொதிக்க விடவும்.
4. அதனுள் ரவையை இட்டு இறுகும்வரை கிளறவும்.
5. பின் பாத்திரத்தில் இட்டு பரிமாறவும்.

## ஜாடியில் எலி - நீதிக்கதை -

தானியங்கள் நிறைந்த ஒரு ஜாடியில் ஒரு எலி விழுந்துவிட்டது. அவரைச் சுற்றி நிறைய உணவு கிடைத்ததால் அவர் மகிழ்ச்சியடைந்தார். இனி உணவைத் தேட வேண்டிய அவசியமில்லை என்று அவர் தனது வாழ்க்கையை இங்கே மகிழ்ச்சியாக வாழ முடியும். சில நாட்களுக்குப் பிறகு தானியங்களை அனுபவித்துக்கொண்டே ஜாடியின் அடிப்பகுதியை அடைந்தார். ஆனால் அவர் ஜாடியின் அடிப்பகுதியில் இருந்ததால் அவரால் வெளியே வர முடியவில்லை. இப்போது அவர் உயிர் பிழைப்பதற்காக ஜாடியில் தானியங்களை வைக்க யாரையாவது சார்ந்திருக்க வேண்டும், அவர் தானியங்களை தேர்வு செய்ய முடியாது. மேலும் பிறர் கொடுத்ததை அவர் சாப்பிட வேண்டும்.

இந்தக் கதையிலிருந்து கற்றுக்கொள்ள வேண்டிய பாடங்கள்

1) குறுகிய கால இன்பங்கள் நீண்ட கால துன்பத்திற்கு வழிவகுக்கும்.

2) வாய்ப்புகள் எளிதாக வந்து நீங்கள் வசதியாக இருந்தால் நீங்கள் சார்புநிலையில் சிக்கிக் கொள்கிறீர்கள்.

3) உங்கள் திறமைகளை நீங்கள் பயன்படுத்தாதபோது, உங்கள் திறமைகளை விட அதிகமாக இழப்பீர்கள். உங்கள் தேர்வுகளையும் சுதந்திரத்தையும் இழக்கிறீர்கள்.

4) சுதந்திரம் சீக்கிரம் வருவதில்லை ஆனால் விரைவில் இழக்கலாம்,

5) வாழ்க்கையில் எதுவும் எளிதில் வராது, அப்படி வந்தால், அது மதிப்புக்குரியதாக இருக்காது.

உங்கள் போராட்டங்களை சமிக்ஞை செய்கிறீர்கள். அவை மாறுவேடத்தில் உங்கள் ஆசீர்வாதம்.

நன்றி.

சுரேன் தேவசெல்லையா
ஆண்டு ஆறு

## எனது பிரதான பாடசாலையில் பல்கலாசார நாள்




அவுஸ்திரேலிய நாட்டில் பல்வேறு வகையான பண்பாடுகள் இருக்கின்றன, அதனால் அவுஸ்திரேலியா ஒரு பல்கலாசார நாடு. ஒவ்வொரு சமுதாயத்தினரும் தங்கள் பண்பாடுகளை மதிக்கினறனர். அதேவேளை ஒவ்வொருவரும் மற்றவர்கள் பண்பாடுகளையும் மதிக்க வேண்டும். நாம் நாட்டு நலனில் அக்கறை உடையவர்களாக இருக்க வேண்டும்.

எனது பிரதான பாடசாலை ஒரு பெண்கள் உயர்தரப் பாடசாலை. எனது பள்ளியில் மூன்றாம் தவணை ஐந்தாவது வரத்தில் பல் கலாசார நாளைக் கொண்டாடுவோம். இப் பல்கலாசார நாளை ஒவ்வொரு வருடமும் கொண்டாடுவோம்.



இந்தவருடம் எனது பள்ளி அதிபர் முதலில் கொண்டாட்டத்தை ஆர்ம்பித்தார். அவர் அபோறிஜினல் மக்களுக்கு முதலில் மரியாதை செய்தார். ஏனென்றால் அவர்கள் இந்த மண்ணுக்கு உரியவர்கள். மேலும் பள்ளி அதிபர் ஒவ்வொரு சமுதாயத்தினரும் மற்றய சமுதாயத்தினரை மதிக்க வேண்டும் என்பதை எடுத்துக் கூறினார்.

ஒவ்வொரு பண்பாட்டையும் எடுத்துக் காட்டும் வகையில் பாட்டு, நடனம், என பல கலை நிகழ்ச்சிகள் நடை பெற்றன. அன்று மாணவர்கள் தங்கள் சமுதாயத்தைப் பிரதிபலிக்கும், ஆடைகளை அணிந்து வந்தனர் . அன்று பள்ளி பல வண்ண நிறங்களில் அழகாகக் காட்சியளித்தது. நான் எனது கலாச்சார உடையை அணிந்து சென்றேன். எனது நண்பிகளும் கொரியா, ஜப்பான், சீனம், என பல நாட்டு வண்ண உடைகளுடன் வந்தனர். பள்ளியில் எல்லோருக்கும் பிடித்த பல நாட்டு உணவுகள் பல கடைகளில் விற்பனைக்கு வைக்கப்பட்டு இருந்தன. மாணவர்கள் வகை வகையாக அவற்றை வாங்கி உண்டு மகிழ்ந்தார்கள்.




பின்னர் நாட்டு வண்ணக் கொடிகளை சில மாணவர்கள் தங்கள் முகத்தில் வரைந்து முக அலங்காரம் செய்து மகிழ்ந்தனர். பல நாட்டு இசைகளும் பள்ளி எங்கும் ஒலித்தது. எல்லோரும் மகிழ்ச்சியாக இருந்தனர். இப் பல்கலாசார நாள் மிகவும் மகிழ்ச்சியாகவும் பயனுள்ளதாகவும் இருந்தது.



கீத்திகா பாலாகிருஷ்ணன் - ஆண்டு 8

## தமிழின் பெருமை



தமிழ் மொழி, இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே தோன்றிய பழமைவாய்ந்த மொழிகளில் ஒன்றாக தோன்றுகிறது. எனவே செம்மொழி என்று பெயர்பெற்றது. நம் தாய்மொழியான தமிழ்மொழி ஓர் இனிமையான மொழியாகும். செம்மொழி என்று விளங்கப்படும் தமிழ்மொழி, பல கலாச்சார மதிப்புகள், பண்டிகைகள், இலக்கியங்கள் என்று முக்கிய நம்பிக்கைகளை கொண்டது. அதுமற்றும் அன்றி, உலகப் பொதுமுறையான திருக்குறள் தோன்றிய இம்மொழியிலே என்பதால் இதன் சிறப்பு அளவிட்டரியாததாக உள்ளது.

தமிழ் மக்கள், தலைமுறை தலைமுறையாக பண்பாட்டு உடைகள், பாரம்பரிய உணவுகள், நண்பர்களையும் குடும்பத்தையும் கவனிக்கும் வழி, நமது பெரியவர்களை மதிப்பு மற்றும் மரியாதை செலுத்தும் முறை போன்ற முக்கிய மதிப்புகளை பின்பற்றி வருகிறார்கள். அனால், இன்றைய இளம் சமூகத்தினில் சிலரோ, இதன் உயர்வை உ னந்தரியாது, தமிழ்கலாச்சாரம் பின்பற்றுவது நாகரிகத்திற்கு புறம்பென்றெண்ணி வேற்றுமொழியில் கலாச்சாரத்தை விரும்புகின்றார்கள்.



தமிழ் மொழியின் சிறப்புகளில் முக்கியமான ஒன்று இலக்கியம் ஆகும். பல தமிழ் இலக்கியங்கள், ஆயிரக்கணக்கான காலங்களுக்கு முன்பே சுவடுகளில், புலவர்களாளும் கவிஞர்களாளும் மிக அழகாக இயற்றப்பட்டுள்ளது. இதற்க்கு உதாரணமாக இதிகாசங்கள் (மகாபாரதம் மற்றும் ராமாயணம்) , திருக்குறள், ஐம்பபெரும்காப்பியங்கள் (சிலப்பதிகாரம், மணிமேகலை, சீவகசிந்தாமணி, குண்டலகேசி, வளையாபதி), சிறுகதைகள் மற்றும் கவிதைகள் ஆகியவை சில.



முத்தமிழ் என்று அழைக்கப்படும் இயல், இசை மற்றும் நாடகம் தமிழுக்கு அழகுசேர்க்கின்றது. எவை மட்டும் அன்றி, தமிழ் பண்டிகைகள் வருடம் வருடம் கோலாகரமாக கொண்டாடப்படுகின்றது. தீபாவளி, பொங்கல், கார்த்திகை தீபம், விஜயதசமி என்று பல உறவினர்கள் மற்றும் நண்பர்களோடு, புதிய கலாசார ஆடையோடும், பல விதமான ருசியான உணவோடும் கொண்டாடப்படுகின்றது.

"யாமறிந்த மொழிகளிலே தமிழ்மொழி போல் இனிதாவது எங்கும் காணோம்" என்று பாரதி கூறினார். இன்று, வேற்று மொழி பேசுவர்களும் தமிழ் மொழியை கற்றுக்கொள்ள ஆசைப்படுகின்றமை தமிழ்மொழியின் வளர்மையும் பெருமையுமே காரணமாகும். இந்த இனிமையான மொழியை தாய்மொழியாக கொண்ட நாம் தமிழின் பெருமையை உணர்ந்து அது அழியாமல் உலகம் முழுதும் பரப்பி வளர்த்து பாதுகாக்கவேண்டியது நமது கடவமையே ஆகும்.



~வேதவர்ணா ராஜா - ஆண்டு 10

## மன அழுத்தம் மாணவர் சமுதாயத்தை எவ்வாறு பாதிக்கிறது

மனச்சோர்வு என்பது ஒரு நிலையான சோகம் மற்றும் ஆர்வத்தை இழப்பது, இது உங்கள் சாதாரண செயல்களைச் செய்வதைத் தடுக்கிறது. பல்வேறு வகையான மனச்சோர்வுகள் உள்ளன, அறிகுறிகள் ஒப்பீட்டளவில் சிறியது முதல் கடுமையானது வரை இருக்கும். பொதுவாக, மனச்சோர்வு ஒரு நிகழ்வின் விளைவாக இல்லை,

ஆனால் நிகழ்வுகள் மற்றும் காரணிகளின் கலவையாகும். உயிரியல் ரீதியாக பாதிக்கப்படக்கூடிய ஒருவருக்கு மனச்சோர்வு தனிப்பட்ட மோதல்கள் அல்லது குடும்ப உறுப்பினர்கள் அல்லது நண்பர்களுடனான தகராறுகளின் விளைவாக இருக்கலாம். மரணம் அல்லது இழப்பு. நேசிப்பவரின் மரணம் அல்லது இழப்புக்குப் பிறகு சோகம் அல்லது துக்கம், இயற்கையாக இருந்தாலும், மனச்சோர்வின் அபாயத்தை அதிகரிக்கும்.



மனநலப் பிரச்சனைகள் ஒரு மாணவரின் ஆற்றல் நிலை, செறிவு, நம்பகத்தன்மை, மன திறன் மற்றும் நம்பிக்கை ஆகியவற்றைப் பாதிக்கலாம், செயல்திறனைத் தடுக்கின்றன. மனச்சோர்வு குறைந்த தர புள்ளி சராசரி மக்களுடன் தொடர்புடையது என்றும், மனச்சோர்வு மற்றும் பதட்டம் ஆகியவை இந்த தொடர்பை அதிகரிக்கக்கூடும் என்றும் ஆராய்ச்சி கூறுகிறது.

பல கல்லூரி மாணவர்கள் மனநலக் குறைபாடுகள் தங்கள் படிப்பில் தலையிடுவதாகக் கூறுகின்றனர். அமெரிக்கன் காலேஜ் ஹெல்த் அசோசியேஷன் 2015 கணக்கெடுப்பில், கல்லூரி மாணவர்கள் கடந்த 12 மாதங்களுக்குள் அவர்களின் கல்வித் திறனை எதிர்மறையாகப் பாதிக்கும் மனநலப் பிரச்சினைகளைக் கண்டறிந்தனர்.

ஹிஸ்பானிக் இளைஞர்களுக்கு, குறிப்பாக பாடசாலை அமைப்பில், கவலை மற்றும் மனச்சோர்வின் பல ஆதாரங்கள் உள்ளன. உடல்ரீதியான கொடுமைப்படுத்துதல், வாய்மொழி கொடுமைப்படுத்துதல், பாடசாலையில் பாதுகாப்பற்ற உணர்வு மற்றும் சமூக அங்கீகாரம் மற்றும் சமூக ஆதரவு இல்லாததால், பாடசாலை ஒரு அச்சுறுத்தும் சூழலாக மாறுகிறது மற்றும் கவலையின் சுழற்சியைத் தூண்டுகிறது. ஸ்டீரியோடைப் அச்சுறுத்தல் இந்த பதட்ட சுழற்சியின் ஒரு பகுதியாகவும் இருக்கலாம்.

இவ்வாறாக மாணவர் சமுதாயம் மன அழுத்தத்தால் பாதிக்கப்பட்டாலும் அன்பான குடும்பமும் மகிழ்ச்சியான குடும்பச் சூழலும் மற்றும் அன்பான நண்பர்களும் இதிலிருந்து மீள்வதற்கான மிகச் சிறந்த மருந்தாகும்.



சி.சிவசொரூபினி - ஆண்டு 10

**“மரங்களும் நண்பர்களே,” சிறுகதை வாசிப்பு அனுபவம்**

“மரங்களும் நண்பர்களே,” என்ற அ.முத்துலிங்கம் அவர்களின் புனைக்கதை யானது, தொழில்நுட்ப வளர்ச்சிக்கு முதலிடம் கொடுக்கப்படுகின்ற 21 ஆம் நூற்றாண்டில்,தாவரங்களின் முக்கியத்துவத்துவத்தையும் அவற்றின் எண்ணிலடங்கா நன்மைகளையும் விளக்கும் வகையில் எழுதப்பட்டுள்ளது.



அத்தோடு, இப்புனைக்கதையில் வரும் “ஆச்சி” என்ற கதாப்பாத்திரமானது, ஏட்டுக் கல்வியறிவு அற்ற ஒரு மூதாட்டியின் அனுபவ அறிவினூடாக, பல முக்கியப் படிப்பினைகளை , வளரும் இளைய தலை முறை யினருக்கு எடுத்துக்காட்டும் வண்ணம் அமைந்துள்ளது. ஏட்டுக் கல்வியினூடாக நாம் பெறும் புத்தக அறிவோடு நின்று விடாமல்,மூத்த ோரின் அனுபவ அறிவினையும் கேட்டு, அதற்கமைய ஒழுகுவது நம் வாழ்வைசிறப்பாக்க வழிவகுக்கும் என்பதனையும் இதன் மூலம் அறிந்து கொண்டே ன்.இதனையே நம் தமிழ் மூதாட்டி, தான் எழுதி நமக்களித்த கொன்றை வேந்தனில்,“மூத்தோர் சொல் கேள் , “ என அழகாகக் கூறியுள்ளார்.

மூத்த தலை முறையினர் தங்களது வாழ்க்கை அனுபவங்களை வாய்மொழி அறிவுறைகளாக இளையோருக்கு வழங்கி அவர்களின் வாழ்க்கையை சிறப்பாக்க வழிவகுக்கின்றனர் என்ற உன்னத கருத்தை இக்கதை எடுத்துறைக்கிறது. இக்கதை யை வாசித்ததன் மூலம் தாவரங்களுக்கு பாதிப்பு ஏற்படாத வகையில் எவ்வாறு நாம் பலவகையான பலன்களை

தாவரங்களிலிருந்து பெற்றுக் கொள்ளலாம் என்பதனை நான் அறிந்துக் கொண்டேன். உதாரணமாக, தாவரங்களை உரிய முறையில், பொருத்தமான பருவத்தில் கவ்வாத்துச் செய்வதனைக் குறிப்பிடலாம். மேலும், மண்ணின் தன்மை , மற்றும் பல்வேறு கால நிலைக் காரணிகள் தாவரவளர்ச்சியில் பெறும் பங்காற்றுகின்றன என்பதனையும், ஒரே வகைத் தாவரத்தில் பல்வேறு இனங்கள் காணப்படுகின்றன என்பதனையும், ஒவ்வொரு பிரதே சத்திற்கும்

தனித்துவமான தாவர இனத்தினை நாம் தெரிவு செய்து வளர்ப்பதன் மூலம், நாம் சிறந்தப் பயன்களைப் பெறலாம் என்பதனையும் இக்கதையில் வரும் உரை யாடலில் இருந்து, தெரிந்துக் கொண்டே ன். உதாரணமாக, மாமரங்களை எடுத்துக் கொண்டால்,யாழ் மண்ணிற்கே சிறப்பானது கறுத்தக் கொழும்பான் மாம்பழம் ஆகும்.



நம் மூத்தோர் அடுத்தத் தலை முறை யினரை யும் கருத்திற்க கொண்டு நட்டு வளர்த்த மரங்களே , நமக்கு விட்டுச் சென்ற அரிய பொக்கிஷங்களாகத் திகழ்கின்றன என்ற கருத்தினை வெளிக்கொணரும் வண்ணம் இக்கதை அமைந்துள்ளது.

தீப்திகா பாஸ்கரதேவன் - ஆண்டு 11

எமது தமிழ் மாணவர்களின் எழுதும் ஆற்றலை ஊக்குவிக்கும் முகமாக உருவாக்கப்பட்ட தமிழ்க்கதிர் என்ற இச்சஞ்சிகை உருவாவதற்கு பல வழிகளிலும் உதவி புரிந்த அனைத்து நல் உள்ளங்களுக்கும் குறிப்பாக தமது படைப்பாற்றல்களை உருவாக்கி இந்த மலரிலே பங்கெடுத்த அனைத்து மாணவர்களுக்கும், வழிகாட்டிய ஆசிரியர்களுக்கும் எமது மனமார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்கின்றோம்.

மேலும் உங்கள் படைப்பாற்றலை வளர்க்கும் களமாக எதிர்வரும் தமிழ்க்கதிர் சஞ்சிகையைப் பயன்படுத்துமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

நன்றி
வணக்கம்.

**எங்களுடன் தொடர்பு கொள்ள**

Tamil Study Centre, Homebush
PO Box 4032
Rochester Street
Homebush, NSW 2140
Australia

Web:  http://www.tsch.org.au
Email: info@tsch.org.au